2022 மார்ச் 23]

தியாகிகள் வாழ்ந்த வீரம் மிகுந்த பூமியாகும். ஒட்டப்பிடாரம் தொகுதிக்குட்பட்ட புதுக்கோட்டை, வல்லநாடு, ஒட்டநத்தம் ஆகிய கிராமங்களில் அரசு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. போதுமான இடவசதி அங்கு இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க கொரோனா பெருந்தொற்றைக் கட்டுப்படுத்திய ஆற்றல் மிக்க மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதி மக்களின் நலன் கருதி, அதை அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களையும் அரசு மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்த வேண்டுமென்பது அனைத்து மன்ற உறுப்பினர்களின் கோரிக்கை என்பதில் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது. இருந்தாலும், மக்களின் பயன்பாடு, மக்கள்தொகை போன்ற பல்வேறு விஷயங்கள் ஒன்றிய அரசின் விதிமுறைகளுக்குட்பட்டிருக்கின்றன. எனவே, ஒன்றிய அரசின் அனுமதியைப் பெற்று, எதிர்காலத்தில் அரசு மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எல்லோருக்கும் பொதுவான பதிலைச் சொல்லிவிட்டார்கள்.*

வினா வரிசை எண் 42, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி, மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

42—

சார்–பதிவாளர் அலுவலகக் கட்டடம்

***6917—திரு. மு.பெ. கிரி:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2022 மார்ச் 23

(அ) செங்கம் தொகுதி, செங்கம் சார்-பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை பதிவு மாவட்டத்திலுள்ள செங்கம் சார்-பதிவாளர் அலுவலகம் 1909 ஆம் ஆண்டில் சிறிய அறையில் செயல்படத் தொடங்கி, படிப்படியாக விரிவாக்கம் செய்யப்பட்டு, தற்போது 2,990 சதுர அடி அளவு கொண்ட கட்டடத்தில் இயங்கி வருகிறது. இந்த அலுவலகத்திற்குப் பதிவிற்கு வரும் பொதுமக்களுக்கு இருக்கை வசதி, கழிப்பிட வசதி போன்ற அடிப்படை வசதிகள் செய்வதற்காக சமீபத்தில் மராமத்துப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. நவீன வசதிகளுடன்கூடிய புதிய வடிவமைப்புடன் சார்-பதிவாளர் அலுவலகம் கட்டுவதற்குக் குறைந்தபட்சம் 4,500 சதுர அடி அளவிற்கு இடம் தேவைப்படும் நிலையில், தற்போது அலுவலகம் உள்ள பகுதியில் இடவசதி இல்லாத காரணத்தினால், தேவையான இடம் கிடைக்கும்பட்சத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டு செல்லப்பட்டு செங்கம் சார்-பதிவாளர் அலுவலகத்திற்கு விரைவில் புதிய கட்டடம் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.

திரு. மு.பெ. கிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலுக்கு நன்றி. விரைவாக அந்த இடத்தை நாங்கள் தேர்வுசெய்து தருகிறோம்; சிறப்பாகக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாது மலைப் பகுதியில் செங்கம் சட்டமன்றத் தொகுதியும், கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதியும் இணைந்து வருகின்றன. சற்றேறக்குறைய 279 மலைக்

2022 மார்ச் 23]

கிராமங்கள் இருக்கின்றன. அந்த மலைக் கிராம மக்கள் தங்கள் இடங்களைப் பதிவு செய்ய வேண்டுமென்று சொன்னால் 60 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கின்ற போளூருக்கு வர வேண்டும்; இல்லையென்று சொன்னால், 30, 40 கிலோ மீட்டரைத் தாண்டி செங்கத்திற்கு வர வேண்டும். இரண்டு இடங்களுக்கும் வருவதற்கு போதுமான போக்குவரத்து வசதி இல்லை. எனவே, அங்கு புதியதாக ஒரு சார்-பதிவாளர் அலுவலகத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலுடன் உருவாக்கித் தருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரப்பதிவு அலுவலகத்தைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ 50 ஆண்டுகளுக்குப் பின்னர், இன்றைக்கு சில அலுவலகங்கள் தாலுகாவிற்கு அப்பாற்பட்டு 2, 3 தாலுகாவைச் சேர்ந்த பகுதியாகவும், சில பதிவு அலுவலகங்கள் மாவட்டம் விட்டு மாவட்டம் வரக்கூடிய சூழ்நிலையிலே தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய சார்-பதிவாளர் அலுவலகங்களுடைய எல்லை சீரமைக்கப்பட்டு வருகிறது. ஒரு சார்-பதிவாளர் அலுவலகம் என்பது அந்த தாலுகாவிற்குட்பட்டதாக இருக்க வேண்டுமென்பதோடு, மக்கள் தொகையையும், நிலப்பரப்பையும் பொறுத்து, தேவைப்படும் பட்சத்திலே இரண்டு அலுவலகங்களைக்கூட கட்டுவதற்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்தப் பணிகள் முடிந்தவுடன் தேவைக்கேற்ப முடிவு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.*

திரு. மு.பெ. கிரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது மலைவாழ் மக்கள் வாழ்கின்ற பகுதி என்பதால் முன்னுரிமை அடிப்படையிலே அதைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். செங்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மக்கள், திருவண்ணாமலையை தலைமையிடமாகக் கொண்டிருக்கின்ற பதிவு–2 அலுவலகத்தில் பதிவு செய்கிறார்கள். அதுவும் நூறாண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட பழைய*

கட்டடத்திலே இயங்குகிறது. அது மாவட்டத்தின் தலைநகராக இருக்கின்ற பகுதி என்பதால், மக்கள் அதிகம் பதிவு செய்கின்ற அலுவலகத்தில் முதலிடம் வகிப்பது திருவண்ணாமலை நகரத்திலே இருக்கின்ற சார்-பதிவாளர் அலுவலகம் ஆகும். எனவே, அதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் போதுமான அளவிற்கு புதிய கட்டட வசதி ஏற்படுத்தித் தருவாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, நிதிநிலைமைக்கேற்ப கட்டிக் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. சக்ரபாணி அவர்கள்.*

திரு. மு. சக்ரபாணி: *மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா இருக்கும் திசையை நோக்கி வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வானூர் தொகுதியில் 98 ஊராட்சிகளும், 30 குக்கிராமங்களும் உள்ளன. ஆனால், வானூரில் ஒரே ஒரு சார்-பதிவாளர் அலுவலகம் மட்டுமே உள்ளது. அனைத்துக் கிராம மக்களும் சிரமப்படுகிறார்கள். எனவே, கிளியனூரை மையமாகக் கொண்டு ஒரு சார்-பதிவாளர் அலுவலகம் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சொன்னதைப்போல, இப்போது சார்-பதிவாளர் அலுவலகங்களுடைய எல்லைகள் சீரமைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அந்தப் பணிகள் முடிந்தவுடன் தேவையிருப்பின், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2022 மார்ச் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி V. அமலு அவர்கள்.*

திருமதி V. அமலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். குடியாத்தம் தொகுதி, குடியாத்தம் நகரத்தில் ஏற்கெனவே பத்திரப் பதிவு அலுவலகம் இருந்தது. அது இப்போது மாற்றப்பட்டுள்ளது. தற்போது அங்கு பத்திரப் பதிவு அலுவலகம் வேண்டுமென மக்கள் கோரிக்கை வைத்துள்ளனர். எனவே, என்னுடைய குடியாத்தம் நகரத்தில் பத்திரப் பதிவு அலுவலகம் அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.*

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுடைய பயன்பாட்டிற்கேற்ப, போக்குவரத்து வசதிக்கேற்ப, அங்கே வரக்கூடிய வருமானத்தை கருத்திலே கொண்டு, நிச்சயமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, அதுகுறித்துப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய குளச்சல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பள்ளியாடி பகுதியில் ஒரு சார்-பதிவாளர் அலுவலகம் இருக்கிறது. அது சுதந்திர காலத்தில் கட்டப்பட்ட கட்டடத்தில் இயங்குகிறது. தற்போது பராமரிக்க முடியாத சூழ்நிலையில் அது இருக்கிறது. இது ஒரு நீண்டநாள் கோரிக்கை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த இடத்தில் ஒரு புதிய, நவீன வசதிகளுடன்கூடிய சார்-பதிவாளர் அலுவலகம் கட்டித் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மாமன்ற உறுப்பினர் அவர்கள், அவருடைய தொகுதியில் புதிதாக சார்-பதிவாளர் அலுவலகம் கட்டித்தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். தற்போது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும் இருக்கிறார்கள். அவர்களுடைய கவனத்திற்கும் இது எடுத்துச் செல்லப்படும். நிச்சயமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் கொண்டு சென்று, இந்த ஆண்டு நிதிநிலைமைக்கேற்ப, அதுகுறித்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு கடுமையான நிதி நெருக்கடிக்கிடையிலேயும் இதுவரை பத்திரப் பதிவுத் துறை வரலாற்றிலே இல்லாத அளவிற்கு பத்திரப் பதிவுத் துறை 12,500 கோடி ரூபாய்க்கு மேல், வருமானத்தை ஈட்டித் தந்திருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காகச் சிறப்பாகச் செயல்படுகின்ற மாண்புமிகு அமைச்சர் மற்றும் துறை அதிகாரிகளுக்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் சட்டமன்றத் தொகுதி, வேட்டவலம் பேரூராட்சியில் பத்திரப் பதிவு அலுவலகம் கட்டுவதற்காக இடம் தேர்வு செய்யப்பட்டு, R.D.O. மூலமாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்குப் பரிந்துரை அனுப்பப்பட்டிருக்கிறது. மிக முக்கியமான, அதிக அளவில் பத்திரப் பதிவுகள் நடைபெறுகின்ற அந்த வேட்டவலம் பகுதியிலே, இந்த ஆண்டு பத்திரப் பதிவு அலுவலகக் கட்டடம் கட்டித்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் சொன்னது, உண்மைதான், கொரோனா காலத்தையும், அதைப்போல மழை வெள்ளக் காலத்தையெல்லாம் கடந்து, இதுவரை பதிவுத் துறையின்

2022 மார்ச் 23]

வரலாற்றிலே இல்லாத அளவிற்கு இன்றையதினம் ரூ.13,218 கோடி வருமானத்தைப் பெற்றிருக்கிறது. வணிக வரித் துறை முதலிடத்தில் இருப்பதோடு, அதிகமாக வருமானத்தையும் இத்துறை பெற்றுக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தேவையை அறிந்து, நிச்சயமாக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நிதியை ஒதுக்குவார்கள் என்ற நம்பிக்கையோடு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, தேவைப்படும் இடங்களிலே இந்த ஆண்டு சார்-பதிவாளர் அலுவலகங்களைக் கட்டித் தருவதற்கு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 43, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

43—

மாணவியர் விடுதி

***2375—திரு. க. அன்பழகன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்பகோணம் தொகுதி, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவியருக்கான விடுதியில் கல்லூரி மாணவியரும் தங்கிப் படிப்பதற்கு அனுமதி வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. க. அன்பழகன் அவர்களுடைய கும்பகோணம் தொகுதியில் ஏற்கெனவே, இரண்டு பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவியர் விடுதிகள் உள்ளன. அவற்றிலே மிகப் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சார்ந்த மாணவியரும் அனுமதிக்கப்படுகிறார்கள். எனவே, பள்ளி மாணவியர் விடுதியில் கல்லூரி மாணவியரை அனுமதிக்க வேண்டிய தேவை எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.*